| | | |
|---|---|---|
| சாட்சி : PW1<br>வில்லியம் | அ.வ.எண்.37/2020 | 06.08.2025 |

1,2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) உங்களுடைய தகப்பனார் பெயர் என்ன என்றால் ஆரோக்கியசாமி. அவர் எந்த வருடம் இறந்துபோனார் என்றால் 1996. உங்கள் அம்மா பெயர் என்ன என்றால் ஆரோக்கியமேரி. அவர் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை. அவர் எப்போது இறந்துவிட்டார் என்றால் 2018. இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் நான் குடியிருந்து வரும் வீட்டை, எனது தம்பி காலி மனை என்று பதிவு செய்து, அவருடைய மனைவிக்கு தானம் கொடுத்துள்ளார். நான் அந்த வீட்டை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வீட்டின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.531/16.

2) நீங்கள் சொல்லும் வீட்டை யார் கட்டினார்கள் என்றால் எனது தாத்தா 1953 ல் கட்டினார். அப்போது கட்டிய வீடு மழையின் காரணமாக இடிந்து விழுந்துவிட்டது என்றால் இல்லை. தற்போது வந்து பார்த்தாலும் அந்த வீடு மச்சு வீடாக உள்ளது என்றால் சரிதான். உங்கள் தகப்பனார் ஆரோக்கியசாமிக்கு தாவா சொத்தை தவிர சர்வே எண்.51/6 மற்றும் சர்வே எண்.51/7 ல் சொத்துக்கள் இருந்தது என்றால் இல்லை. நீங்களும், உங்கள் அப்பாவும் சர்வே எண்.51/6 ல் 50 சென்ட் நிலத்தை மணி என்பவருக்கு 1989 ல் விற்பனை செய்துள்ளீர்கள் என்றால் சரிதான். உங்கள் அண்ணன் ஆல்பர்ட் ஜெயராஜ் என்பவர் சர்வே எண்.51/7 ல் 39 சென்ட் நிலத்தை 1988 ல் மணி என்பவருக்கு விற்பனை செய்தார் என்றால் சரிதான்.

3) சர்வே எண்.51/6 மற்றும் 51/7 இரண்டு சொத்துக்களும் நீங்களோ, உங்கள் அண்ணனோ கிரையம் வாங்கிய சொத்துக்கள் இல்லை என்றாலும், உங்கள் அப்பாவின் சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி இரண்டு சொத்துக்களை விற்கும் போது 1ம் பிரதிவாதிக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் 20 வயது இருக்கும். மேற்படி சர்வே எண்களில் கண்ட சொத்துக்களை விற்பனை செய்து நீங்கள் உங்கள் தங்கையை பராமரிக்க எடுத்து கொண்டீர்கள் என்றால் இல்லை, எனது அண்ணன் ரூ.10000 ம் 1ம் பிரதிவாதிக்கு கொடுத்தார். நான் என்னுடைய சொத்தை விற்காமல் வைத்திருந்தேன் பிறகு எனக்கு தேவை ஏற்பட்டது விற்றுவிட்டேன். நீங்கள் தற்போது குடியிருந்து வரும் வீட்டை மேலே சொன்ன இடங்களை விற்று வந்த பணத்தினால் கட்டப்பட்டது என்றால் இல்லை.

4) தற்போது குடியிருக்கும் வீட்டின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் என்ன என்றால் தெரியவில்லை. மேற்படி வீட்டை எந்த வருடம் வாங்கினீர்கள் என்றால் சுமார் 20 வருடம் இருக்கும். 20 வருடத்திற்கு முன்பு எங்கு குடியிருந்து வந்தீர்கள் என்றால் தாவா சொத்தில் குடியிருந்து வந்தேன். தாவா சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் சுமார் 300 சதுரடிக்குள் இருக்கும். மேற்படி 300 சதுரடிக்குள் தான் உங்கள் குடும்பத்தாரும், உங்கள் அண்ணன் குடும்பத்தாரும், உங்களுடன் பிறந்த சகோதரிகளும் குடியிருந்து வருகிறீர்கள் என்றால் முன்னாள் குடியிருந்தோம் தற்போது அவர்கள் தனியாக இருக்கிறார்கள். சர்வே எண்.51/6 மற்றும் 51/7 ல் உள்ள சொத்துக்களை விற்பனை செய்யும் போது நீங்களும், உங்கள் அண்ணனும் வாய்மொழியாக பாகம் செய்து கொண்டு தாவா சொத்தை உங்களுடைய தம்பி 1ம் பிரதிவாதியான பெலிக்ஸ் ஜெயராஜ் க்கு தருவதாக பேசி கொண்டீர்கள் என்றால் இல்லை.

5) சர்வே எண்.51/6 மற்றும் 51/7 ஆகிய சொத்துக்களை உங்களுடைய தம்பி 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவருடைய அனுமதியில்லாமல் நீங்களே விற்றுள்ளதால் அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது அண்ணன் எனது தம்பிக்கு ரூ.10000 ம் கொடுத்தார். சர்வே எண்.51/6 மற்றும் 51/7 ல் கண்ட சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டு உங்கள் தம்பிக்கு தாவா சொத்தை கொடுத்துவிட்டீர்கள் என்றாலும் தற்போது உங்கள் தம்பியிடமிருந்து தாவா சொத்தை பாகம் கேட்டு பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.51/6 கண்ட சொத்துக்களை விற்பனை செய்து தான் அதிலிருந்து வந்த பணத்தை வைத்து தான் தற்போது குடியிருக்கும் வீட்டை வாங்கியுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

6) உங்கள் அப்பா பெயரில் உள்ள சொத்தை விற்று வந்த பணத்தை வைத்து தற்போது நீங்கள் குடியிருக்கும் வீட்டை வாங்கியுள்ளதால் 1ம் பிரதிவாதிக்கு அதில் பங்கு உண்டு என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கோரியுள்ள பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் உங்கள் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.